
உ
சிவமயம்



எல்லையில்லாப் பேரின்பத்தில்

**அமரர் திரு சுப்பிரமணியம் விஸ்வநாதன்**

அவர்களின்

# நினைவு மலர்

18-08-2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



யாழ்ப்பாணம் – தென்மராட்சி – கைதடி
சந்திரசேகர முதலி வழித்தோன்றல்
அமரர் விஸ்வநாதன் சுப்பிரமணியம்
தம்பதியினரின்
புதல்வன்

# விஸ்வநாதன்

அவர்களின்

# நினைவு மலர்

18.08.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

என்றும் எமக்கெலாம்
உற்றவனாய் எமக்கினியனாய்
எம் இதயக் கருவறையில்
நித்தியமாய் உறையும்
எம் செல்வமே
சீராளா
உந்தன் பாத கமலத்திற்கு இம்
மலர் சமர்ப்பணம்

சகோதரன், சகோதரி, மருமக்கள்,
பெறாமக்கள், பேரர்

"விஸ்வநாதர் வளவு"
கைதடி வடக்கு,
18.08.2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனே போற்றி
ஒப்பில் அப்பனே போற்றி
வானோர் குருவனே போற்றி
எங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருவென்றென்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி
தருக நின்பாதம் போற்றி
தமியனேன் தனிமை தீர்த்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் எம் இதயத்தில்
என்றும் சீராளன் பொன் அடியில்



மலர்வு **22-09-1936**

உதிர்வு **19-07-2003**

# சுப்பிரமணியம் விஸ்வநாதன்

## அவர்கள்

### தித்தித்த திதி

சுப்பிரமணியர் சேய் மேலோன் விஸ்வநாதன்
அப்பிரமான ஆன்மாவை நீக்கி மாதேன் பொற்பாதம்
ஆண்டு சுபானு ஆடி அபரச் சஷ்டி தனில்
வேண்டி யடைந்தார் விழைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

யாழ்ப்பாணம் – தென்மராட்சி – கைதடி ஸ்ரீ சந்திரசேகர முதலி வழித் தோன்றலாம் "காந்தி" எனப் பலராலும் போற்றப்பட்ட அமரர், தபாலதிபர் ஸ்ரீமான் விஸ்வநாதர் சுப்பிரமணியம் – நாகம்மா தம்பதியினரின் புதல்வன்,

# விஸ்வநாதன் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

**பெற்றோர்**

| | |
|---|---|
| **தந்தை:** | அமரர் ஸ்ரீ விஸ்வநாதர் சுப்பிரமணியம் |
| **தாய்:-** | அமரர் ஸ்ரீமதி நாகம்மா சுப்பிரமணியம் |
| **தோற்றம்:** | 22.09.1936 |
| **கற்ற கல்விக் கூடம்:** | முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை, கைதடி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி |
| **கல்வித் தகைமை:** | பொதுக் கல்வியைப் பூர்த்தி செய்த பின்னர் London City & Guild மின்னியல் துறைச் சான்றிதழ் |
| **தொழில்:-** | யாழ்ப்பாணம் மின்சார நிலையத்தில் பொறியியல் துறையில் கடமை புரிந்தமை. |
| **பிற:-** | இளமையில் பீடித்த நோய் காரணமாகப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார், என்றும், எவருடனும் அன்பாய், அமைதியாய், எம் இதயத்துறைந்த ஓர் உத்தமன் |
| **மறைவு:-** | சுபானு வருஷம் ஆடித்திங்கள், சனிக்கிழமை 3ம் நாள் (19.07.2003) அன்று அபரபக்கச் சஷ்டித்திதி கூடிய வேளை பொய் கெட்டு மெய்யானார். ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி! |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடன் பிறப்பினர் – உற்றவர் – உறவினர்**

**சகோதரன்:-** திரு. சு. ஸ்ரீகாந்தன்

**சகோதரிமார்:-**
திருமதி சரஸ்வதி தர்மா வரதர்
அமரர் திருமதி இலட்சுமிதேவி வாமதேவன்

**மைத்துனர் / மைத்துனியினர்:-**
அமரர் திரு. பொ. தர்மாவரதர்,
திரு. ந. வாமதேவன்,
திருமதி செல்வராஜேஸ்வரி, ஸ்ரீகாந்தன்

**மருமக்கள்:-**
திரு. த. பாலச்சந்திரன்,
திரு. த. பாலகுமாரன்
திரு. த. பாலதயாளன்,
திரு. த. பாலராசன்,
திரு. த. பாலேந்திரன்
செல்வி த. சீதாலட்சுமி,
திரு. வா. பஞ்சாட்சரம்
செல்வி. வா.பஞ்சலட்சுமி,
திருமதி அ. செல்வலட்சுமி
செல்வி. வா. ஜெயலட்சுமி,

**பெறாமக்கள்:-**
செல்வி ஸ்ரீகாந்தன் கேதாரகௌரி
செல்வி ஸ்ரீகாந்தன் சுமதி,
திருமதி சகுந்தலாதேவி பாலசந்திரன்
திருமதி சுலோசனா பாலகுமாரன்,
திருமதி கெங்கா பாலதயாளன்
திருமதி சிவகாமசுந்தரி பாலராசன்,
திருமதி சிவநிதி பாலேந்திரன்,
திரு. இ. அருந்தவமூர்த்தி

**சிறிய தந்தையர்**
அமரர் ஸ்ரீமான் வி. இராமலிங்கம்,
அமரர் ஸ்ரீமான் வி. நமசிவாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சிறிய தாயார்:- | அமரர் ஸ்ரீமதி அன்னம்மா இராமலிங்கம்<br>அமரர் ஸ்ரீமதி இரட்ணவல்லி நமசிவாயம் |
| பற்றான பேரர்:- | பா. சுதர்சன்<br>பா. ஜனனி<br>பா. பிரியதர்சன்<br>பா. யாதேவ்<br>பா. அபிராம்<br>பா. சாரங்கன்<br>பா. ஹொசான்<br>அ. சௌமிகன்<br>அ. பிரியங்கன் |
| சிறிய தந்தையர், வழி சோதரர், சோதரிமார் | திரு. க. சபாபதிப்பிள்ளை – பரமேஸ்வரி தம்பதியினர்<br>திரு. இ. சந்திரசேகரம் – சிவபாக்கியம் தம்பதியினர்<br>திரு. இ. ஸ்ரீநிவாசன் – யோகேஸ்வரி தம்பதியினர்<br>திரு. தவராசா – ஜெயபாலதேவி தம்பதியினர்<br>திரு. பத்மராசா – சற்குணதேவி தம்பதியினர்<br>திரு. தயாபரன் – சறோஜினிதேவி – தம்பதியினர்<br>திரு. ந. ஜெயபாலசிங்கம் – சுபத்திரா தம்பதியினர்<br>திரு. ந. சற்குணசிங்கம் – பவானி தம்பதியினர்<br>திரு. குகன் – சகுந்தலாதேவி தம்பதியினர் |
| சிறிய தந்தையர், சோதரர் வழிப் பற்றான - பெறாமக்கள், மருமக்கள், | செல்வன் / செல்வி<br>செந்தில்மணி, வசந்தி, நிர்மலன், நிர்மலராசன், நிர்மலகாந்தன், நிர்மலகுமாரன், குணாளன், சறோஜினி, தர்சினி, பாமினி, சுதர்சினி, கோகுலதாஸ், மேகலா, ஜெயசீலன் சந்திரசேகரம், கம்சா, பிரதாப், துஸ்யந்தினி, ரதீசன், தாட்சாயினி, டிலக்சன், கேமரூபன், ஐதுர்சனா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவயோக சுவாமிகள் அருளிச் செய்த நற்சிந்தனை
### நான் யார்?

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று, நீ ஆத்மா, ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக் கடவது. ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தரும நெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் முன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர்.

இப்படிக்கு
**அவனே - நானே**
(யோகர் சுவாமிகள்)

## ஓமர்காயம் - விதியின் விளையாட்டு

எழுதிச் செல்லும் விதியின் கை
எழுதி எழுதி முன் செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும்
வழுவிப் பின்னால் நீக்கியொரு
வார்த்தை யேனும் மாற்றிடுமோ?
அழுத கண்ணீரா றெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோத்திரப் பாடல்கள்

### விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
வினாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணியின் கனிந்து.

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம்

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொழியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத
நாளெல்லாம் பிறவா நாளே.

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

மாதர்ப் பிறைக் கண்ணி யானை
மலையான் மகளொடு பாடிப்
போதொடு நீர் சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுப டாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டேன் னவர் திருப்பாதம்
கண்டறி யாதன கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

மற்றப் பாற்றெனக் கின்றி நின்றிருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற னும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தெழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினும்
சொல்லும் நாநமச்சி வாயவே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி சயசய போற்றி யென்னுங்
கைதான் நெகிழவிடேன் உடையா யென்னைக் கண்டு கொள்ளே.

கடையவனே கருணையி னாற் கலந் தாண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதிகண் டாய்விறல் வேங்கையின் தோல்
உடைய வனேமன்னும் முத்தர கோசமங் கைக்கரசே
சடையவனே தளர்ந் தேன்எம்பி ரானென்னைத் தாங்கிக்கொள்ளே.

உற்றாரை யான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவன.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
மண்ணின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## பட்டினத்தார் பாடல்

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையுநின்னை ஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாய்ப்பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகப்பனே

## திருக்குற்றாலம்

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பால்உண் கடைவாய்ப் படும்முன்னே - மேல்விழுந்தே
உற்றார் அழும்முன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு.

## பொது

இருப்பதுபொய் போவதுமெய் என்றுஎண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினை உன்னாதே - பருத்ததொந்தி
நம்மதுஎன்று நாம் இருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மது என்று தாம் இருக்கும் தான்.

## கந்தரலங்காரம்

நாளென் செயும் வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங் கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுகந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தரனுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## கந்தபுராணம்

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய

## திருப்புகழ்

கருவினுருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து
கலைகள் பலவே தெரிந்து மதனாலே
கரிய குழல் மாதர்தங்கள் அடிசுவடு மார்புதைந்து
கவலை பெரிதாகி நொந்து மிகவாடி
அரகரசிவாய வென்று தினமும் நினையாமல் நின்று
அறுசமய நீதிஒன்றும் அறியாமல்
அசனமிடுவார்கள் தங்கள் மனைகள் தலைவாசல் நின்று
அறுதினமும் நாணமின்றி அழிவேனோ
உரகபடமேல் வளர்ந்த பெரிய பெருமாளரங்கள்
உலகளவு மால்மகிழ்ந்த மருகோனே
உபயகுல தீப துங்க விருது கவிராஜசிங்க
உறைபுகலியூரிலன்று வருவோனே
பரவை மனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனருளால் வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனை கொன்று அமரர் சிறைமீளவென்று
பழநிமலை மீதில் நின்ற பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி மத்தி மூர்த்தியாவத்தை அத்திதலம் கந்தசாமி கோயில் வரலாறு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயற்கை வளங்கொளிக்கும் தென்மராட்சிப்பகுதியின் மேற்கில் கைதடி என்னும் பதி அமைந்துள்ளது இக்கைதை நகரின் மத்தியில் அமைந்துள்ள மூர்த்தியாவத்தையில் மாவடிக் கந்தன் என்ற பெயர் கொண்ட அத்திதல முருகன் எழுந்தருளியுள்ள திருக்கோவில் விளங்குகின்றது. இத்தலம் ஒரு நூற்றாண்டுக்கு மேல் பழமை வாய்ந்தது. இந்த இடத்தில் முன்பு அலரி, அத்தி, மா ஆகிய மரங்கள் நெருங்கி வளர்ந்திருந்த கூடலுக்குள் இரவில் பூசை நடைபெற்று மணியோசை கேட்டு வருவதை விவசாயிகளும், மக்களும் அவதானித்து அங்கு ஒரு வேல் வைத்து வணங்கி வந்தனர். பின்னர் மயிலக கிழவனார் என்பவர் ஓலையால் வேயப்பட்ட ஆலயம் ஒன்றை அமைத்துப் பூசை செய்து ஆதரித்து வந்தார். பின் திருவேலுப்பிள்ளை விசுவநாதர் என்பவரால் ஆகம விதிப்பிரகாரம் கற்கோயில் கட்டப்பட்டு ஆயிரத்துத் தொழாயிரத்து முப்பத்தைந்தாம் ஆண்டு முதற் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்று தொட்டு கந்தபுராண படனமும் திருவாதவூரடிகள் புராண படனமும் வருடந்தோறும் நிகழ்ந்து வருகின்றது. இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன் ஆனி உத்தரத்தில் இரண்டாம் முறையாகக் குமப்பாபிஷேகம் நிகழ்ந்தது. 1982ம் ஆண்டு துர்மதி வருடம் பங்குனித் திங்கள் முப்பதாம் நாள் அனுஷ நட்சத்திரத்தில் மூன்றாவது கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

இப்பொழுது அத்திதலக் கோயிலில் நித்திய, நைமித்திக பூஜைகளும்,பஜனை புராண படனம் ஆகியவைகளும் சிறந்த பரிபாலன சபையினரால் நிர்வகிக்கப்பட்டு ஒழுங்காக நடந்து வருகின்றன.

கற்கோயிலாக இருக்கும் எங்கள் கந்தன் கோயிலுக்குச் சொற்கோயிலும் அமைத்துக் கொடுத்தார். ஒரு பழம் புலவர். அவர் இயற்றிய ஊஞ்சற் பாட்டுக்கள் எழுதப்பட்ட ஏடு இன்றும் தேவஸ்தானத்தில் பொன்னே போற் காப்பாற்றப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவ சிவ
திருச்சிற்றம்பலம்
குகமயம்

# அத்திதலம் கந்தசாமிபேரிற் செய்த திருவூசல்

(பல வருடங்களுக்கு முற்பட்ட ஏட்டுச் சுவடியிலுள்ளபடி)

மாமேவுமி தழிமதி நதியே சூடும்
மங்கைபங்கனெற்றிவிழி வந்து தோன்றும்
பூமேவு செங்கைவடிவேலோன் பாதம்
போற்றியினி தாகவிசை புகழ்ந்து பாட
காமேவு கைதைநகரத்தியென்னும்
கவினேறு தலமருவி வாமுமாதி
ஏமெவு வீரகத்தி விமோசனன்றன்
னிருசரண மலரரிறைஞ்சியேத்து வாமே
திருமருவும் அவ்வுமுவ்வாம் கால்கணாட்டி
சீர்கொள்பரநாதவிந்தாம் விட்டம்பூட்டி
உருமருவும் ஆகமமேற்கட்டி காட்டி
யொன்மலர்மாலிகைகவரியொருங்கு ஆட்டி
வருமரிய சதுர்வேதக் கயிறு மாட்டி
மாவிந்திர நீலமணிப் பலகை நீட்டி
தருமரிய பிரணமாம் பீடமேறித்
தக்கவத்தி தலக்குகரேயாடீருசல்

மாமேவும் இதழி – பெருமைமிக்க கொன்றை மலர், இசை – புகழ், கா, சோலை – கவின் – அழகு, ஏமேவு சிறப்புப் பொருந்திய விமோசனம் – நல்ல முடிவை அருள்பவன்.

1) அவ் – அகரம், ஆனா, உவ் – உகரம், ஊனா, விந்து – சுத்தமாயை, ஒண் – பிரகாசமான, மா – பெரிதாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமகளும் இந்திரரையும், கவரிபாட்ட
நண்ணுமருத்துவரதங்கை வட்டம் நீட்ட
ஏமமுறு மிந்துகதிர் கவிகை காட்ட
எரிகாரஞ்சார் தீபமிருளெங்குமோட்ட
காமருறு கந்தருவர் சுருதி கூட்டக்
கருதடியார் தமதுமனக் கவலை வீட்ட
தாமகிழ் வினரமாதர் வடந்தொட்டாட்ட
தக்கவத்தி தலக்குகரே யாடீ ரூசல் 2

செங்கமல நிகர்வதன மாறுமாட
தேசுதரு திருப்புயமீராறு மாட
துங்கமிகு மங்களஞ்சேர் படைகளாட
சோதிபெறுமுந் நூலும் மார்புமாட
பொங்குமெழிற் றண்டையணி பதங்களாட
பொற்புமிகு வடிவேலும் புடையினாட
தங்கமிரு சக்தியிரு சார்பு மாட
தக்கவத்திதலக்குகரேயாடீரூசல் 3

ஆதிபரனெற்றிவிழி வந்த நாத
அரியயனோடமரரறியாத நாத
வேதமுறை தந்தருளுமெங்கணாத
வேடரது மகளணையு விமலனாத
சோதிசெறி வேல்மருவு செங்கை நாத
தோகைதெய்வ யானை புணர் தூய நாத
தாதவிழு நீபமுடி சூடு நாத
தக்கவத்திதலக்குரேயாடீரூசல் 4

2. இந்திரை – இலக்குமி, மருத்துவர் – சூரியனின் புதல்வர், வட்டம் – ஆலவட்டம், ஏமம் – பாதுகாவல், இந்துகதிர் – சந்திரசூரியர், காமர் – அழகு, வீட்ட –வீட்டுநீங்க, அரமாதர் – தேவமகளிர், எரிகரம் சார் – அக்கினி பகவானினின் கையிலிருக்கும்.
3. தேசு – பிரகாசம், துங்கம் – சிறப்பு, அம்கரம் – அழகியகை, எழில் – அழகு, இருசார்பும் – இருபக்கங்களிலும்.
4. செங்கை – சிவந்தகை, தோகை – தோகையையுடைய மயில்போன்ற, தாது – மகரந்தம், நீபம் – கடப்பமலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதர்தும்புருவிருவர் கீதம்பாட
நாடுவித்தியாதரர்கைத்தாளம் போட
வாரணவுதுந்துபியினிசையைநீட
மதங்கமொரு காளவிசை வந்து கூட
சீரடையுங்குறுமுனிகை சென்றி சூட
திசைமுகனோடரியமரர் சேர்ந்து நாட
தாரணியுமரமாதர் நடனமாட
தக்கவத்திலக்குகரே யாடீரூசல் 5

திருமுடிகளோராறும்வதனமாறும்
தேங்குமருட்கண்களொடு புயமீராறும்
காமிலகு வேல் முதலாம் படைகள் யாவும்
கடம்பமலர் மாலையணி செய்புமார்பும்
வரமருவ வடியர்தினந் தேடுந் தாளும்
வாய்ந்தவிரு சக்திகளு மருவித்தோன்ற
தருமொருசீர் மயிலிவருங் கோலங்காட்டி
தக்கவத்திதலக்குகரேயாடீ ரூசல் 6

பண்ணவருமிந்திரனுமயனுமேய்ந்த
படியிடந்த மாயவனும் பற்றினேர்ந்த
என்னரிய முனிவரரும் வந்துசேர்ந்த
எமையருடியெனப்பரவ விசைந்து போந்த
திண்ணிய சூராதியரை வீட்டு வேந்த
தெய்வதமாதொடுவள்ளி சேருங் காந்த
தண்ணளியினடியரிடர்க் கடலைநீந்த
தக்கவத்திதலக்குகரேயாடீ ரூசல் 7

5. வார் அணவு – வார்கட்டப்பட்ட மதங்கம் – மத்தளம், குறுமுனி – அகத்தியர், திசைமுகன் – பிரமா, தார் – மாலை.
6. தேங்கு – நிறைந்த, அணி – அழகு, மருவ – பொருந்த, இவரும் – செலுத்திச் செல்லும்
7. பண்ணவர் தேவர், அருள்தி – அருள்வீராக, சூராதியர் – சூரன் முதலாகிய அசுரர், வேந்த – வேந்தனே, ஏய்ந்தபடி இடந்தமாயவன் பொருந்தும்படி பூமியை அகழ்ந்து சென்ற திருமால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியதிருமறைப்பொருளே யாடீருசல்
அமரர்சிறைமீட்டவரேயாடீருசல்
குருதிவடிவேலவரே யாடீருசல்
குறமகடனாயகரே யாடீருசல்
பிரமகுரு வானவரே யாடீருசல்
பேணுமுமை பாலகரே யாடீருசல்
தரணிதொழு தாளினரேயாடீருசல்
தக்கவத்திதலக்குகரேயாடீருசல் 8

அரியமறை விரித்தவரே போற்றி போற்றி
அன்பரினை வீர்த்தவரே போற்றி போற்றி
உரவவுணர்க்காதினரே போற்றி போற்றி
யொருங்கு குழைக்காதினரே போற்றி போற்றி
பொருவிலொரு மயிலினரே போற்றி போற்றி
புறமிரு மாமயிலினரே போற்றி யென்று
தரணியினோர் நிதந்துதிசே யாற்று மாதி
தக்கவத்திதலக்குகரே யாடீருசல் 9

அந்தணரு மானினமு மறமும் வாழி
யருமறையுஞ் செங்கோலும்மரசும் வாழி
முந்துகற்புமாதர்சைவமுதன்மை வாழி
முவுலகுந் தொழும்வேலும் மயிலும் வாழி
தந்திமகள் குறமகளுந் தகரும் வாழி
சாற்றரிய வெண்ணிறோ டின்னூல் வாழி
சந்ததமுங் கைதைநகர்ச் சனங்கள் வாழி
தக்கவத்திதலக்குகரே வாழி வாழ 10

8. குருதி – இரத்தம், பிரமகுரு – சிவனுக்கு பிரணவத்தை உபதேசித்து சிவகுரு எனப் பெயர் பெற்றவர்
9. மறைவிரித்தவர் – வேதத்தை உபதேசித்தவர், அன்பரினை வீரித்தவர் – அன்பர் நுட்டம் பரவும்படி செய்தவர், உரவு அவுணர் காதினர் – வலிய அசுரரைக் கொன்றவர், குழைக்காதினர் – குழையைக் காதில் அணிந்தவர், புறமிருமாமயிலினர் – பக்கத்தில் இருமயில் போன்ற சக்திகளைக் கொண்டவர், துதிசேய் – துதிக்கப்படும் சிவனின் மகன், ஆற்றும் ஆதி – ஆன்மாக்களுக்குப் பிறப்பிறப்பால் வரும் இளைப்பை கெவல நிலையில் தன்னிடம்வைத்திருக்கும் முதற்பொருள்.
10. தந்தி யானை, தகர் – ஆட்டுக்கடா, இன்னூல் – இந்தச் சுவடி, சந்ததம் – என்றென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

கூறுபுகழீசர்மகிழ் குமரா எச்சரிக்கை
கோலவருள் ஆறுமுகக் கோவே எச்சரிக்கை
நாறுமலர் தேவர்டம் நம்பா எச்சரிக்கை
ஞானவொளி வீசுபுகழ் நாதா எச்சரிக்கை
ஏறுமயில் எறிவருந்தேவே எச்சரிக்கை
இலங்கு அயில் வேலுடைய ஏந்தால் எச்சரிக்கை
மாறுகொளும் சூரர்குலம் மாய்த்தாய் எச்சரிக்கை
மானவருள் அத்திதல மேயா எச்சரிக்கை

## பராக்கு

ஆனபொருள் பிரணவத்துக்கருள்வாய் பராக்கு
அம்புயனைச்சிறைபிடித்த அமலா பராக்கு
மீனவிழி யானைமகள் வேட்டாய் பராக்கு
வேண்டுமரமீந்தருளும் வேளே பராக்கு
கானகுறவள்ளியெழில் காண்பாய் பராக்கு
கமழுமலர்கடப்பந்தார் மார்பாய் பராக்கு
ஈனமுள எங்களிடர் தீர்ப்பாய் பராக்கு
இலங்குபுகழ் அத்திதல இறைவா பராக்கு

# தோத்திரம்

ஆதிபரன் தாமருளு மொழிப்படியே சூர்தடிந்து
வாதியுறு மமரருக்கு வள்ளம்போல் அருள் சுரந்து
ஓதிதனைக்குறுமுனிக்கு உணர்த்தியொரு குருவடிவாம்
மேதினியில் அத்திதல வேல் முருகா போற்றி போற்றி

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகா நாம் வாழ அருள்வாய்

(ஆசிரிய விருத்தம்)

உலகுகள் யாவுமுலவுதற்கிடமாய்

உயிர்களுக்குயிரது மாகி

ஒருங்குபல் பொருள்கள் யாவையுமாகி

ஒருதனிமுதல்வனாய் நின்றாய்

இலகிய உயிர்கள் மலவிருளகற்ற

இயற்றினை யைம்பெருந்தொழில்கள்

ஈறுசெய்காலமெவற்றையுமொடுக்கும்

எல்லையில் கருணையின் கடலே

அலகிலா வடிவில் அறுமுகனாகி

அசுரரை வேரொடு களைந்தே

அமரருக் காக்கமாக்கியவது போல்

அடியரேமெமக்குமேல் விளையுஞ்

சிலசில வல்லப்ப லபகையழியச்

சிறுதேருருட்டி யருளே

சிறந்துநாம் வாழ அத்தியந் தலத்தாய்

சிறுதேதருட்டியருளே.

இலகிய – விளங்குகின்ற, மலவிருள் – பாசவினை, ஈறுசெய் காலம் – ஊழிக்காலம், அலகிலா – அளவில்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டிருந்த எமது சோதரர் விஸ்வநாதன் இறைபதமடைந்த வேளை பல வழிகளில் எமக்குப் பக்க பெலமாக நின்று பேருதவிகள் நல்கிய உறவினர், நண்பர்கள் மற்றும் அன்பான இதயங்கட்கும், இறுதி வைபவத்திலும் இன்றைய ஆத்ம சாந்தி நிகழ்விலும் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் கரம் கூப்பி நன்றி நவில்கின்றோம்.

வணக்கம்

"விஸ்வநாதர் வளவு"
கைதடி
18.08.2003

சோதரர்,
சு. ஸ்ரீகாந்தனும் குடும்பத்தினரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ உ



# கீதாசாரம்

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொவருடையதாகிறது.
- மற்றொரு நாள் அது வேறொருவருடைதாகும்.
- இந்த மாற்றம் உலக நியதியாகும்.

Pillaiyar

குமரன் கணினிச் சேவைகள், கைதடி மேற்கு, கைதடி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org